ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஇ) தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2020), மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், சொல்லுங்கள்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கமாகக் குறிக்கப்பட்டிருக்கக்கூடியதில் 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின்

@ 9—1—2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ALONE TRIUMPHS

பிரிவு 5 (3)–ன்கீழ் எந்தவொரு பல்கலைக்கழகமும், எந்தவொரு தனியார் கல்லூரியும் அவை நிறுவப்படுவதற்கு முன்பாக அரசின் அனுமதியைப் பெற்றுதான் செய்ய வேண்டும். அப்படி பெறவில்லை என்று சொன்னால், அந்த இணைப்பு வழங்கப்படாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகமானது அரசினுடைய முன்னனுமதி எதுவும் பெறாமலேயே 12 தனியார் கல்லூரிகள், கல்வி நிறுவனங்களுக்கு இணைப்புகளை வழங்கியுள்ளது. இது முழுவதுமாக சட்ட விரோதமானது, சட்டமீறலாகக் கருதப்படுகிறது. இச்செயலை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முதலில் நான் கடுமையாக எதிர்க்கிறேன். இச்செயலுக்கு காரணமான துணைவேந்தர் அவர்கள், எப்படி இந்த இணைப்பினை வழங்கியிருக்கிறார், எந்த அனுமதியோடு வழங்கினார் என்ற சந்தேகம் எழுகிறது. அரசின் அனுமதி பெறாமலேயே இணைப்புகள் வழங்குவது என்பது ஒருவேளை அமைச்சரின் ஒத்திசைவோடு நடைபெற்றதா என்ற ஐயமும் ஏற்படுகிறது. இல்லையென்று சொன்னால், அவ்வாறு செயல்பட்டிருக்கக்கூடியவர்களின்மீது உரிய நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என்று மக்களின் சார்பாக நான் கேட்க விரும்புகிறேன். இனிவருங்காலங்களில், இதுபோன்ற சட்டமீறல் செயல்களில் ஈடுபடக்கூடிய அரசுத் துறையைச் சார்ந்தவர்கள் எவர்மீதும், துணை வேந்தர்களாக இருந்தாலும், அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதேநேரத்தில், இனிவருங்காலங்களில் இதுபோன்ற சட்டமீறல்கள் நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்து, மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, இது சட்டமீறிய செயல், இதற்குத் துணைபோக திராவிட முன்னேற்றக் கழகத்தால் முடியாது என்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த சட்டமீறலும் இதில் இல்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013 ஆம் ஆண்டு தமிழகம் எல்லா கலை வடிவங்களிலும் முதலிடத்தில் இருக்க வேண்டுமென்பதற்காக

இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் உருவாக்கிய விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தை வடிவமாகக் கொண்டு, உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் இந்த இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம். அதற்குண்டான தனித்துவத்தை மதித்து, affiliation norms–ஐ அவர்கள் அதற்கடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு போட்டிருக்கிறார்கள். அந்த affiliation norms ஆனது unique ஆக, தனித்துவமிக்க affiliation norms ஆக இருந்ததினால், அந்தப் பல்கலைக்கழகமே ஒரு குழுவை அமைத்து, என்ன norms–ஐ ஒரு Collegiate Education–லிருந்து வந்து செய்வார்களோ, அவை எல்லாவற்றையும் அவர்கள் adhere செய்திருக்கிறார்கள். இதுவரைக்கும் 9 அரசுக் கல்லூரிகள் மற்றும் 2 அரசு உதவிபெறும் கல்லூரிகள்–Aided Colleges, அதைத்தவிர, 14 தனியார் கல்லூரிகள் affiliation வாங்கியிருக்கிறார்கள். இதற்கு Provisional affiliation கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போதைக்கு இதுதான் status. இன்றைக்கு 860 மாணவர்கள் அதில் graduation பெறப்போகிறார்கள். மிக, மிக அதிகமான demand உள்ள கல்லூரிகளாக இந்தக் கல்லூரிகள் ஒவ்வொன்றும் இருக்கின்றன. மிக அழகாக இந்தப் பல்கலைக்கழகத்தில் எல்லாப் பாடங்களும் வடிவமைக்கப்பட்டு, நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் தரத்தையும், தனித்துவத்தையும் உத்தேசித்துதான் இந்தச் சட்டமுன்வடிவை அவைக்கு சமர்ப்பித்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தில் MGR Film and Television Institute–ஐ இணைத்திருக்கிறார்கள். அது, இதில் இரண்டாவது ஷரத்து. மூன்றாவது ஷரத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரை, அவர்கள் மனதுக்கு மிகவும் உகந்த, இந்த தமிழ்நாட்டிலே இளைய பல்கலைக்கழகமான இந்த இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்திற்கு சூட்டுவதும் இதில் மூன்றாவது அம்சம். இந்த மூன்றுதான் இதனுடைய அம்சங்கள். எந்த சட்டமீறலும் கிடையாது. இந்தியாவிலேயே முதன்மையான இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகமாக இது எழுந்து வந்துகொண்டிருக்கிறது. அதற்காக, இந்த அவையின் முன்னால் இந்தச் சட்டமுன்வடிவை வைத்திருக்கிறோம். நன்றி.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 9 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

9. அரசினர் தனித் தீர்மானம்

நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2019 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்று இருபத்து ஆறாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2) ஆம் பகுதியின் காப்புரை (d) பகுதியின் வரம்பெல்லைக்குள் வரும் திருத்தங்களுக்கு ஒப்பளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2019 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்று இருபத்து ஆறாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2) ஆம் பகுதியின், காப்புரை (d) பகுதியின் வரம்பெல்லைக்குள் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.